# Geography Model Test Questions 4 in Tamil With Answers

1. இந்தியாவில் முதன் முதலாக பருத்தி ஆலை எங்கு நிறுவப்பட்டது?

   **(A) கல்கத்தா** (B) மும்பை (C) மைசூர் (D) கோயம்புத்தூர்

2. இந்தியாவில் தற்போது எத்தனை பெரிய துறைமுகங்கள் உள்ளன?

   (A) 5 (B) 11 **(C) 12** (D) 15

3. பருத்தி பயிரிட சிறந்த மண் எது?

   (A) வண்டல் மண் (B) களிமண்

   (C) மெல்லிய, நீர்வடிந்த மண் **(D) கருப்பு மண்**

4. எந்த மாநிலத்தில் சூரிய சக்தி நடைமுறையில் பயன்படுத்துகிறது?

   (A) ஒரிஸா (B) பஞ்சாப் (C) பீகார் **(D) இராஜஸ்தான்**

5. வடகிழக்கு இரயில்வேயின் தலைமையிடம்

   (A) அஸ்ஸாம் (B) கல்கத்தா **(C) கோரக்பூர்** (D) தானாபூர்

6. துர்காபூர், பிலாய் மற்றும் ரூர்கேலா ஆகிய இடங்களில் இரும்பு உருக்கு ஆலைகள் எந்த ஐந்தாண்டு திட்ட காலத்தில் அமைக்கப்பட்டன?

   (A) முதல் ஐந்தாண்டு திட்டம் **(B) இரண்டாம் ஐந்தாண்டு திட்டம்**

   (C) மூன்றாம் ஐந்தாண்டு திட்டம் (D) நான்காம் ஐந்தாண்டு திட்டம்

7. இந்தியாவின் எந்த மாநிலம் 'சர்க்கரைக் கிண்ணம்' என அழைக்கப்படுகிறது?

   (A) ஆந்திரப்பிரதேசம் **(B) உத்திரப்பிரதேசம்**

   (C) இமாசலப்பிரதேசம் (D) தமிழ்நாடு

8. உதய்பூர் மாவட்டத்தில் உள்ள ஜாவார் சுரங்கம் எதற்குப் பெயர் பெற்றது?

   (A) இரும்புத்தாது (B) தாமிரம் **(C) மாங்கனீஸ்** (D) துத்தநாகம்

9. இந்தியாவில் தேயிலை உற்பத்தியில் நான்கில் மூன்று பங்கு இடம் பெறும் பிரதேசத்தை கீழ்க்கண்டவற்றுள் கண்டறிக:

   (A) தென்மேற்கு இந்தியா **(B) வடகிழக்கு இந்தியா**

   (C) தென் இந்தியா (D) வடமேற்கு இந்தியா

10. கீழ்க்கண்ட இந்திய மாநிலங்களின் கூட்டாக பாங் அணைக்கட்டு அமைந்துள்ளது.

    (A) ஹரியானா, பஞ்சாப், இராஜஸ்தான் (B) குஜராத், மத்தியப் பிரதேசம், ஒரிஸா

    (C) குஜராத், இராஜஸ்தான், பஞ்சாப் **(D) இராஜஸ்தான், ஹரியானா, குஜராத்**

11. இந்தியாவின் பருத்தி விளைச்சலுக்கும், சாகுபடி செய்யவும் உகந்த பகுதியாக உள்ள பிரதேசம்

(A) ரான் ஆ.்.ப் கட்ச் (B) காஷ்மீர் பள்ளத்தாக்கு

(C) சிந்து கங்கைச் சமவெளி **(D) தக்காண பீடபூமி**

12. இந்திய சுரங்கங்களுள் இச்சுரங்கத்தில் தான் ஊது உலைக்கேற்ற தரமான நிலக்கரி கிடைக்கின்றன.

**(A) ஜாரியா** (B) இராமகுண்டம் (C) நெய்வேலி (D) இராணிகஞ்ச்

13. கீழ்க்கண்ட உற்பத்தி தொழிற்சாலைகளுள் எத்தொழிற்சாலை தற்கால தொழில்துறை வளர்ச்சிக்கு அடிப்படையான ஒன்றாகும்?

**(A) இரும்பு எ.்.குத் தொழிற்சாலை** (B) காகிதத் தொழிற்சாலை

(C) நெசவுத் தொழிற்சாலை (D) மோட்டார் வாகனத் தொழிற்சாலை

14. இந்தியாவின் இவ்விரு மாநிலங்களில் இரும்புக்கனியின் பரவல் மிகுதியாக காணப்படுகின்றன.

(A) மத்தியப்பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் **(B) பீகார் மற்றும் ஒரிஸா**

(C) ஒரிஸா மற்றும் ஆந்திரப் பிரதேசம் (D) பீகார் மற்றும் தமிழ்நாடு

15. இந்தியாவில் எம்மாநிலம் நுண்மின் கருவி நகர் என அழைக்கப்படுகிறது?

**(A) பெங்களூர்** (B) போபால் (C) சென்னை (D) ஹைதராபாத்

16. தென் பீகாரில் கனரகத் தொழிற்சாலைகள் அதிக அளவில் அமர்ந்திருப்பதற்கு முக்கியக் காரணம்

(A) முதலீடு (B) மலிவான தொழிலாளர்கள்

**(C) கச்சாப் பொருள்** (D) கல்கத்தாவிற்கு அருகில் அமைந்துள்ளது.

17. தவறாக இணைக்கப்பட்டுள்ள இணையைக் கண்டறிக:

(A) ரூர்கேலா - ஒரிஸா **(B) பிலாய் - பீஹார்**

(C) துர்காப்பூர் - மேற்கு வங்காளம் (D) பத்ராவதி - கர்நாடகம்

18. இந்தியாவின் எந்தப் பகுதியில் கண்டக் காலநிலை நிலவுகிறது?

(A) தெற்குப்பகுதி (B) மேற்குப்பகுதி (C) வடகிழக்குப்பகுதி **(D) வடமத்தியப்பகுதி**

19. 'மாங்காய் மழை' எங்கு முக்கியமாக காணப்படுகிறது?

(A) மேற்கு வங்கம் மற்றும் அஸ்ஸாம் (B) தக்காண பீடபூமி

(C) குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா **(D) கேரளா மற்றும் கர்நாடகா**

20. சம்பல் நதி கீழ்க்கண்ட மாநிலங்களில் ஓடுகிறது.

(A) மஹாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் மற்றும் பீஹார்

(B) உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் பீஹார்

**(C) உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான்**

(D) உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் ஒரிஸ்ஸா

21. இந்த இந்திய மாநிலத்தில் கால்வாய்ப் பாசனம் மிகுதியாக காணப்படுகிறது.

**(A) பஞ்சாப்** (B) ஆந்திரப்பிரதேசம் (C) பீஹார் (D) தமிழ்நாடு

22. இந்தியாவில் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் உருவாகும் புயல் காற்றுகள் பெரும்பாலானவை தோன்றும் இடம்

(A) தென் கோளார்த்த கடல் பகுதி (B) அரபிக்கடல்

**(C) தென்மேற்கு வங்காள விரிகுடாக் கடல்** (D) தென்கிழக்கு வங்காள விரிகுடாக்கடல்

23. கீழ்வரும் இந்திய பிரதேசங்களுள் எது அதிக நிலநடுக்கத்தால் பாதிக்கக்கூடிய அபாயம் உள்ளது?

(A) ஆரவல்லி தொடர் குன்றுகள் (B) தக்காண பீடபூமி

**(C) இமயமலை தொடர் குன்றுகள்** (D) மாளவப் பீடபூமி

24. வருடத்தின் எப்பருவத்தில் வங்காள விரிகுடாவில் இருந்து தோன்றும் அயனிமண்டலச் சூறாவளியின் உன்னத அலைவெண் காணப்படுகிறது?

(A) தென் மேற்கு பருவகாற்றுக் காலம் **(B) வடகிழக்கு பருவகாற்றுக் காலம்**

(C) இலையுதிர் காலம் (D) கோடை காலத்திற்குப் பின்னர்

25. இலையுதிர் காடுகளின் மற்றொரு பெயர்

(A) பசுமை மாறாக் காடுகள் **(B) பருவகாற்று காடுகள்**

(C) மாங்குரோவ் காடுகள் (D) அல்பைன் காடுகள்

26. எந்த மாநிலத்தில் அதிகமான ஏரிப்பாசன பரப்பளவு காணப்படுகிறது?

**(A) தமிழ்நாடு** (B) உத்திரப்பிரதேசம் (C) மேற்கு வங்காளம் (D) கர்நாடகம்

27. கீழ்வரும் மாநிலங்களின் அதிக அளவில் இரும்புத் தாது சேம ஒதுக்கீடு காணப்படும் மாநிலம்

**(A) பீஹார்** (B) மத்தியப்பிரதேசம் (C) ஒரிஸ்ஸா (D) மேற்கு வங்காளம்

28. மத்திய தாதுச்சுரங்க ஆராய்ச்சி நிலையம் காணப்படும் இடம்

**(A) தன்பாத்** (B) பூனே (C) கட்டாக் (D) பிம்பிரி

29. அதிக அளவு இயற்கை ரப்பரை உற்பத்தி செய்வது

(A) கர்நாடகம் **(B) கேரளா** (C) தமிழ்நாடு (D) மேற்கு வங்காளம்

30. பிரம்மபுத்திரா ஆற்றின் மற்றொருப் பெயர்

(A) டிஸ்டா **(B) சாங்கோ** (C) கண்டக் (D) யமுனை

31. எம்மாநிலத்தில் 1000 ஆண்களுக்கு 1040 பெண்கள் என்ற மிகச் சாதகமான பால் விகிதம் காணப்படுகிறது?

(A) பீஹார் **(B) கேரளா** (C) அஸ்ஸாம் (D) தமிழ்நாடு

32. கார்பெட் தேசியப் பூங்கா காணப்படும் மாநிலம்

(A) பீஹார் (B) கர்நாடகா (C) மத்தியப்பிரதேசம் **(D) உத்திரப்பிரதேசம்**

குறிப்பு: உத்திரப்பிரதேசத்தை பிரித்ததால் தற்போது உத்தரகாண்ட்-ல் உள்ளது.

33. அதிக முதலீட்டுடன் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றி, பரந்த அளவில் பணப்பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயத்தின் பெயர்

(A) தீவர விவசாயம் **(B) தோட்டப்பயிர் விவசாயம்**

(C) பரந்த முறை விவசாயம் (D) சுயதேவை விவசாயம்

34. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் அமைந்துள்ள இடம்

(A) அரபிக்கடல் **(B) வங்காள விரிகுடா**

(C) இந்து மகாசமுத்திரம் (D) சிவப்புக் கடல்

35. எந்த தாது இருப்பதால் செம்மண் நிறம் சிவப்பாக இருக்கின்றது?

(A) நைட்ரஜன் (B) பொட்டாசியம் (C) மாங்கனீசு **(D) இரும்புத்தாது**

36. 1991-ஆம் ஆண்டு கணக்கீடுப்படி இந்தியாவின் மிக அதிக மக்கட்தொகை கொண்ட நகரம்

(A) சென்னை (B) கல்கத்தா **(C) மும்பாய்** (D) புதுடெல்லி

37. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) மகாநதி | 1. திரியம்பக் |
| (b) கோதாவரி | 2. மஸ்தார் ஏரி |
| (c) கிருஷ்ணா | 3. மகாபலேஸ்வரம் |
| (d) காவேரி | 4. தலைக்காவேரி |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| **(B)** | **2** | **1** | **3** | **4** |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

38. இந்தியாவின் இரும்புத்தாது மிக அதிகமாக உற்பத்தியாகும் மாநிலம்

**(A) பீஹார்** (B) ஒரிஸ்ஸா (C) மத்தியப்பிரதேசம் (D) கர்நாடகம்

39. கடின தானிய வகையைச் சார்ந்தவை

(A) பருத்தி விதைகள் (B) அரிசி

**(C) மக்காச்சோளம் மற்றும் பார்லி** (D) பருப்புவகைகள்

40. உலகத்திலேயே நீளமான இரயில்வே நடைமேடை இருக்கும் நாடு

(A) சிங்கப்பூர் (B) லண்டன் (C) அமெரிக்கா **(D) இந்தியா**

41. ஜப்பானின் நாணயம்

(A) ரூபாய் (B) டாலர் **(C) யென்** (D) தினார்

42. முதன் முதலில் இந்தியாவில் சுரங்க ரயில்பாதை அமைக்கப்பட்ட இடம்

**(A) கல்கத்தா** (B) சென்னை (C) மும்பாய் (D) டெல்லி

43. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) ஹிந்துஸ்தான் புகைப்பட சுருள் தொழிற்சாலை | 1. கோயம்புத்தூர் |
| (b) அணுமின் நிலையம் | 2. ஊட்டி |
| (c) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் | 3. நெய்வேலி |
| (d) அனல்மின் உற்பத்தி நிலையம் | 4. கல்பாக்கம் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| **(B)** | **2** | **4** | **1** | **3** |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

44. இந்தியாவில் எந்த நகரை கணிணி நகரம் என்று அழைக்கிறோம்?

(A) மும்பை (B) டெல்லி **(C) பெங்களூர்** (D) கல்கத்தா

45. இந்தியாவில் முதன்முதலாக அமைக்கப்பட்ட அணுமின் நிலையம் உள்ள இடம்

**(A) தாராபூர்** (B) கல்பாக்கம் (C) நரோரா (D) பூனா

46. ரொடிஷியா என்ற நாட்டின் புதுப்பெயர்

(A) நமீபியா (B) மியான்மார் **(C) ஜிம்பாப்வே** (D) டான்சானியா

47. சூரியன் -----------------க்கு மேல் செங்குத்தாக பிரகாசிக்கும் பொழுது சம பகலிரவு நாள் ஏற்படுகிறது

**(A) பூமத்தியரேகை** (B) கடகரோகை

(C) மகர ரேகை (D) அண்டார்டிக் வட்டம்

48. பெரிய இமாலய மலைகளில் காணப்படாத தொடர் குன்று

**(A) காரகோரம்** (B) கைலாஷ் தொடர்குன்றுகள்

(C) நங்கபர்வதம் (D) பிர்பஞ்சால்

49. கீழ்வருவனவற்றில் இந்தியாவில் மழை மறைவு பிரதேசமாக எது அழைக்கப்படுகிறது?

**(A) மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதி** (B) மலபார் கடற்கரை

(C) சிவாலிக் குன்றுகள் (D) காசி குன்றுகள்

50. ஈரத்தன்மை கொண்ட பொழுது உப்புவதும், வறண்ட தன்மை காணப்படும் பொழுது வெடிப்பதுமான தன்மை கொண்ட மண்

(A) வண்டல் மண் (B) செம்மண் **(C) கரிசல் மண்** (D) சரளை மண்

51. கீழ்வரும் மாநிலங்களுள் எது அதிகமான லிக்னைட் சேமிப்பை பெற்றுள்ளது?

**(A) தமிழ்நாடு** (B) இராஜஸ்தான் (C) குஜராத் (D) ஜம்மு & காஷ்மீர்

52. ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தின் கோடைக்கால தலைநகரான ஸ்ரீநகர் அமைந்துள்ள ஆற்றின் பெயர்

(A) சினாப் **(B) ஜீலம்** (C) ரவி (D) சிந்து

53. இந்தியாவில் காபி உற்பத்தியின் முதன்மையிடம் வகிப்பது.

(A) கேரளா (B) தமிழ்நாடு **(C) கர்நாடகா** (D) அஸ்ஸாம்

54. இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் காணப்படும் துறைமுகம்

(A) கேரளா (B) கொச்சின் (C) கல்கத்தா **(D) விசாகப்பட்டினம்**

55. கீழ்வரும் பொருட்களில் இந்தியாவிற்கு அதிக அன்னியச்செலவாணியை பெற்றுத் தருவது

(A) சணல் (B) இரும்பு எ.்.கு **(C) தேயிலை** (D) சர்க்கரை

56. கீழ்வருவனவற்றுள் எது கங்கையாற்றின் துணையாறு அல்ல?

(A) கான்டெக் (B) கோமதி (C) யமுனை **(D) சாம்பல்**

57. கீழ்வருவனவற்றுள் எது துறைமுகம் அல்ல?

(A) கொச்சின் (B) பாரதீப் **(C) இராமேஸ்வரம்** (D) விசாகப்பட்டினம்

58. வைகை ஆறு தோன்றுமிடம்

(A) அகஸ்தியர் குன்றுகள் **(B) ஏலமலை** (C) கொல்லிமலை (D) கூர்க்

59. இந்தியாவில் காபியை உற்பத்தி செய்யும் மூன்று மாநிலங்கள்.

(A) கேரளா, கா்நாடகா, ஆந்திரப்பிரதேசம்

**(B) கேரளா, கா்நாடகா, தமிழ்நாடு**

(C) தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸா

(D) கா்நாடகா, மஹாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம்

60. நெசவுத் தொழிற்சாலை ------------------ஐ அடிப்படையாக கொண்டது.

**(A) விவசாயம்** (B) தாதுப்பொருட்கள்

(C) இரசாயனத் தொழிற்சாலை (D) இவற்றில் ஏதுமில்லை

61. விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைக்கு பெயா்

(A) வெள்ளப்புரட்சி (B) நீலப்புரட்சி **(C) பசுமைப்புரட்சி** (D) வெண்மைப்புரட்சி

62. கேரளாவையும் தமிழ் நாட்டையும் இணைக்கும் முக்கிய கணவாய்

**(A) பால்காட்** (B) தால்காட் (C) போர்காட் (D) ஆரம்போலி

63. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) வண்டல் மண் | 1. கோவை, ராமநாதபுரம் |
| (b) செம்மண் | 2. ராமேஸ்வரம், தூத்துக்குடி |
| (c) கரிசல் மண் | 3. காவேரி டெல்டா |
| (d) சதுப்பு நிலம் | 4. தமிழ் நாட்டின் மூன்றில் இரண்டு பங்கு நிலம் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| **(B)** | **3** | **4** | **1** | **2** |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

64. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

பட்டியல் I பட்டியல் II

(a) மிக முக்கியப்பயிர் 1. கரும்பு

(b) வியாபாரப்பயிர் 2. நெல்

(c) ஒரு ஹெக்டேருக்கு 100 டன் 3. அதிக அளவில் விளையும் பயிர்கள்

(d) பசுமைப்புரட்சி 4. சணல்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| **(B)** | **2** | **4** | **1** | **3** |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

65. எது சரியாகப் பொருந்தவில்லை?

(A) பருத்தி தொழில்கள் - கோயம்புத்தூர்

(B) தீப்பெட்டி தொழில்கள் - சிவகாசி

(C) காகித தொழில்கள் - புகளுர்

**(D) தோல் பதனிடும் தொழில்கள் - மதுரை**

66. இந்திய நேரம் கிரீன்விச் நேரத்தை விட --------- அதிகமானது

(A) 4 ½ மணி நேரம் (B) 6 மணி நேரம் (C) 8 ½ மணி நேரம் **(D) 5 ½ மணி நேரம்**

67. கீழக்கண்டவற்றில் எந்த எரிபொருள் சுற்றுப்புற சூழலை குறைந்த அளவு பாதிக்கும்?

(A) டீசல் (B) நிலக்கரி **(C) ஹைட்ரஜன்** (D) மண்ணெண்ணெய்

68. தமிழ்நாட்டில் தோல் தொழிற்சாலைகளுக்கு பெயர்பெற்ற மாவட்டம் எது?

**(A) வேலூர்** (B) இராமநாதபுரம் (C) நாமக்கல் (D) தர்மபுரி

69. தமிழ் நாட்டில் "நெல்களஞ்சியம்" என அழைக்கப்படுவது.

(A) திருச்சிராப்பள்ளி மாவட்ம் **(B) தஞ்சை மாவட்டம்**

(C) நாகை மாவட்டம் (D) செங்கல் மாவட்டம்

70. தமிழ் நாட்டின் 'பருத்தி நகரம்' எனப்படுவது

(A) மதுரை (B) காஞ்சிபுரம் (C) கரூர் **(D) கோயம்புத்தூர்**

71. கூடங்குளம் அணுமின் நிலையம் அமைய இந்தியாவுடன் ஒத்துழைப்பு நல்கும் நாடு எது?

(A) பிரான்ஸ் (B) யு.எஸ்.ஏ **(C) ரஷ்யா** (D) ஜெர்மனி

72. எந்த இந்திய மாநிலம் ஒரு தலைநகர்களை கொண்டது?

(A) கேரளா **(B) ஜம்மு & காஷ்மீர்** (C) பஞ்சாப் (D) குஜராத்

73. பரப்பளவில் மிகப்பெரிய இந்திய மாநிலம் எது?

**(A) மத்தியப்பிரதேசம்** (B) உத்திரப்பிரதேசம் (C) தமிழ்நாடு (D) மேற்கு வங்காளம்

**குறிப்பு:** மத்தியப்பிரதேசத்தை பிரித்ததால் தற்போது ராஜ்ஸ்தான் பெரியது.

74. எல்நினோ என்பது என்ன?

(A) வைரஸ்களினால் ஏற்படும் ஒருவகை வியாதி

(B) இதனால் அதிக மழை பொழிகிறது

**(C) மகா சமுத்திரங்களையும், சீதோஷ்ணத்தையும் வெப்பமடைய செய்கிறது.**

(D) இது ஒரு மேற்கத்திய இசை நடனம்

75. எந்த நகரங்களிடையேயானது நீண்டதூர மின்சாரப்பாதை

(A) மும்பாய் - டெல்லி

**(B) கல்கத்தா - டெல்லி**

(C) கல்கத்தா - மும்பாய்

(D) இவை ஏதுவுமில்லை

76. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் எது?

(A) யு.எஸ்.ஏ **(B) சுவிட்சர்லாந்து** (C) லாஸ் ஏஞ்சல்ஸ் (D) இவை ஏதுவுமில்லை

77. தமிழ்நாட்டிலுள்ள நாமக்கல் நகரம் கீழ்க்கண்ட ஒன்றின் மூலமாக அதிகமாக தெரிய வந்தது.

(A) லாரி அமைப்புக் கட்டுதல் **(B) கோழி வளர்ப்பு**

(C) ஆடைத் தொழில் (D) பனை சாகுபடி

78. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) குங்குமப் பூ | 1. பீஹார் |
| (b) அரக்கு | 2. தமிழ்நாடு |
| (c) கிராம்பு | 3. ஜம்மு காஷ்மீர் |

(d) ஆமணக்கு விதை 4. கேரளா

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| **(D)** | **3** | **1** | **4** | **2** |

79. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று மட்டும் திரும்ப பெறமுடியாத சக்தி மூலம்?

(A) காற்று (B) கடல் அலை **(C) மண்ணெண்ணெய்** (D) புவிஈர்ப்பு சக்தி

80. கீழ்க்கண்ட எந்த மாநிலம் மற்ற மாநில எல்லைகளை அதிக எண்ணிக்கையில் பெற்றுள்ளது?

(A) மேற்கு வங்காளம் (B) மத்தியப்பிரதேசம் **(C) உத்திரப்பிரதேசம்** (D) கர்நாடகம்

81. புகழ் வாய்ந்த காஷ்மீர் பள்ளத்தாக்கு இவற்றிற்கிடையே காணப்படுகின்றது.

(A) பிர்பாஞ்சால் மற்றும் கிழக்கு இமாத்திரி மலைத் தொடர்

**(B) பிர்பஞ்சால் மற்றும் மேற்கு இமாத்திரி மலைத் தொடர்**

(C) காரகோரம் மலைத் தொடர் மற்றும் இமாத்திரி

(D) டங்மலைத் தொடர் மற்றும் சிவாலிக்

82. எங்கு மிகக்குறைந்த குளிர்கால வெப்பநிலை காணப்படுகிறது?

**(A) லே** (B) சித்ராதுர்க் (C) பாட்னா (D) கர்நாடகம்

83. வடகிழக்கு பருவகாற்று காலத்தில் மழை வீழ்ச்சி பெறும் பிரதேசம்

(A) மலபார் கடற்கரை (B) கொங்கண கடற்கரை

**(C) சோழ மண்டல கடற்கரை** (D) சர்கார் கடற்கரை

84. இமயமலை ஆறுகள் வற்றாத ஆறுகளாக இருப்பதற்கான காரணம்

(A) தென்மேற்கு பருவகாற்று மழை வீழ்ச்சி தருகிறது.

(B) வடகிழக்கு பருவகாற்று மழை வீழ்ச்சி தருகிறது.

**(C) பனி உருகுவதால் நீர் கிடைக்கிறது.**

(D) ஆண்டு முழுவதும் மழைவீழ்ச்சி கிடைக்கிறது.

85. கீழ்க்கண்ட கூற்றினை ஆராய்க:

கூற்று (A) : தேயிலையும் காபியும் நீலகிரி மலையில் சாகுபடி செய்யப்படுகிறது.

காரணம் (R) : இரண்டு பயிர்களின் வளர்ச்சிக்கும் ஒரே வகையான காலநிலை தேவைப்படுகிறது

கீழ் கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும், (R), (A) க்கு சரியான விளக்கம்.

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R), (A) க்கு சரியான விளக்கமல்ல.

**(C) (A) சரி ஆனால் (R) தவறு**

(D) (A) தவறு ஆனால் (R) சரி

86. கீழ்க்கண்ட கூற்றினை ஆராய்க:

கூற்று (A) : பருத்தி கருப்பு மண்ணில் பயிரிடப்படுகிறது

காரணம் (R) : கருப்பு மண் ஈரத்தை தேக்கி வைத்து கொள்வதில்லை

கீழ்காணும் குறியீடு மூலம் சரியான விடையை தேர்ந்தெடு:

(A) (A) சரி, மேலும் (R), (A) க்கு சரியான விளக்கம்.

(B) (A) சரி ஆனால் (R), (A) க்கு சரியான விளக்கமல்ல.

**(C) (A) சரி ஆனால் (R) தவறு**

(D) (A) தவறு ஆனால் (R) சரி

87. இந்தியாவில் கீழ்க்கண்டவற்றுள் மிக உயர்ந்த மரம் எது?

**(A) தேக்கு** (B) சால் (C) சந்தனமரம் (D) ரோஸ்வுட்

88. கீழ்க்கண்ட கூற்றினை ஆராய்க:

கூற்று (A) : ஒரே வகையான மூலப்பாறைகள் வெவ்வேறு காலநிலையில் வேறுபட்ட மண்ணை ஏற்படுத்துகிறது.

காரணம் (R) : மண் அமைவதில் காலநிலை முக்கிய பங்கு வகிக்கிறது.

கீழ்கணும் குறியீடு மூலம் சரியான விடையை தேர்ந்தெடு:

**(A) (A) மற்றும் (R) சரி மேலும், (A) க்கு சரியான விளக்கம் ஆகும்**

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி (A) க்கு சரியான விளக்கமல்ல.

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

89. கீழ்க்கண்ட கூற்றினை ஆராய்க:

winmeen.com

கூற்று (A) : இந்திய மக்கள் தொகை 1921க்குப் பின்னர் விரைவில் வளர்ச்சியடைந்தது.

காரணம் (R) : இந்தியாவில் மக்கள் தொகை 1921க்குப் பின்னர் பிறப்பு விகிதத்தைவிட இறப்பு விகிதம் குறைந்தது

கீழ்காணும் குறியீடு மூலம் சரியான விடையை தேர்ந்தெடு:

(A) (A) மற்றும் (R) சரி மேலும் (A) க்கு சரியான விளக்கம்.

(B) (A) மற்றும் (R) சரி ஆனால் (A) க்கு (R) சரியான விளக்கமல்ல.

**(C) (A) சரி ஆனால் (R) தவறு**

(D) (A) தவறு ஆனால் (R) சரி

90. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எதில் மக்கள் தொகை இறங்குமுகமாக உள்ள மாநிலங்கள் வரிசைப்படுத்தபட்டுள்ளது?

(A) மத்தியப்பிரதேசம், பீகார், உத்திரப்பிரதேசம்

(B) உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேஷம்

**(C) உத்திரப்பிரதேசம், பீகார், மகாராஷ்டிரம்**

(D) மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், பீகார்

91. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) நேப்பா நகர் | 1. டீசல் |
| (b) வாரணாசி | 2. ஆகாய விமானத்தொழிற்சாலை |
| (c) நாசிக் | 3. காகிதத் தொழிற்சாலை |
| (d) கலமசேரி | 4. இயந்திர தொழிற்சாலை |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | **3** | **1** | **2** | **4** |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

92. கீழ்க்கண்ட கூற்றினை ஆராய்க:

கூற்று (A) : பீகாரில் முக்கியமான இரும்பு எ∴கு சுரங்கங்கள் காணப்படுகின்றன.

காரணம் (R) : பீகார் கனிம வளங்கள் உற்பத்தியில் முன்னணி மாநிலம்

கீழ்காணும் குறியீடு மூலம் சரியான விடையை தேர்ந்தெடு:

(A) (A) மற்றும் (R) சரி மேலும் (R), (A) க்கு சரியான விளக்கம்.

**(B) (A) மற்றும் (R) சரி ஆனால் (R), (A) க்கு (R) சரியான விளக்கமல்ல.**

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

93. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) இந்தியாவின் ஆபரணம் | 1. மணிப்பூர் |
| (b) தோட்டநகர் | 2. பெங்களூர் |
| (c) ஐந்தாறுகளின் நிலம் | 3. பஞ்சாப் |
| (d) தாவரவியலாளர்கள் சொர்க்கம் | 4. சிக்கிம் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | **1** | **2** | **3** | **4** |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

94. என்.எச்.47 கீழ்க்காணும் இடங்களை இணைக்கின்றன.

(A) கன்னியாகுமரி - டெல்லி

**(B) கன்னியாகுமரி - சேலம்**

(C) சென்னை - திண்டுக்கல்

(D) மும்பாய் - டெல்லி

95. 1991ஆம் ஆண்டு கணக்கீடுப்படி நகரங்களில் மக்கட்தொகையை அடிப்படையாகக் கொண்டு இறங்கு வரிசையில் எழுதுக.

(A) சென்னை, புதுடெல்லி, கல்கத்தா, மும்பாய்

**(B) மும்பாய், கல்கத்தா, புதுடெல்லி, சென்னை**

(C) கல்கத்தா, மும்பாய், புதுடெல்லி, சென்னை

(D) புதுடெல்லி, கல்கத்தா, மும்பாய், சென்னை

96. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே குறிப்பிட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I (அணை) | பட்டியல் II (ஆறு) |
|---|---|
| (a) நாகார்ஜீனா் சாகா் | 1. சம்பல் |
| (b) ஹிராகுட் | 2. சீனாப் |
| (c) சலால் | 3. கிருஷ்ணா |
| (d) காந்திசாகா் | 4. மகாநதி |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| **(B)** | **3** | **4** | **2** | **1** |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

97. ஜாம்ஷெட்பூரில் அமைந்த இரும்பு எ∴கு தொழிற்சாலைக்கு தேவையான நீா்தரும் ஆறு

(A) சட்லெஜ் (B) தாமோதா் **(C) சுவா்னரேகா** (D) சோன்

98. கீழ்க்கண்டவற்றில் சரியாக பொருத்தப்பட்டது எது?

I. நா்மதா - ஜபல்பூா்

II. கோதாவரி - நாசிக்

III. மகாநதி - கட்டாக்

IV. அமராவதி - தமிழ்நாடு

(A) I மற்றும் II **(B) I, II,III மற்றும் IV**

(C) I மற்றும் III (D) III மற்றும் IV

99. இந்திய யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கை

**(A) 7** (B) 8 (C) 10 (D) 9

100. உத்ரகண்ட நிலப்பகுதி அடங்கியுள்ள மாநிலம்

(A) பீஹார் **(B) உத்திரப்பிரதேசம்** (C) மகாராஷ்டிரம் (D) மத்தியப்பிரதேசம்

குறிப்பு: உத்திரப்பிரதேசத்தை பிரித்து உத்ரகண்ட் மாநிலம் உருவானது.

winmeen.com